மிக்கி'ஸ் மேக்னட்



பிராங்க்ளின் எம். பிரான்லி மற்றும் எலினோர்
படம்: க்ரோக்கெட் ஜான்சன்
தமிழில்: சந்தோஷ் குமார்

மிக்கி'ஸ் மேக்னட்

பிராங்க்ளின் எம். பிரான்லி மற்றும் எலினோர்

படம்: க்ரோக்கெட் ஜான்சன்

தமிழில்: சந்தோஷ் குமார்

மிக்கி ஒரு படப் புத்தகத்தைப்

படித்துக்கொண்டிருந்தான்.

பின்னர் அவனது அம்மா

" மிக்கி ,தயவுசெய்து அந்த ஊசிப்

பெட்டியை என்னிடம் கொண்டு வா “

என்று கூறினார் ,





மிக்கி தன் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு ,ஊசிப்பெட்டியை எடுத்துக்கொண்டு வந்தான். அவன் அந்தப் பெட்டியைத் தன் அம்மாவிடம் கொடுக்க ஓடினான்.

ஆனால் பாவம் எதிர்பாராதவிதமாக மிக்கி தடுமாறி கீழே விழுந்தான்.

தரையெங்கும் ஊசிகள் சிதறிக்கிடந்தன – சில ஊசிகள் இடுக்குகளில் , சிலது கம்பளத்தின் மீதும் , மற்றும் சில ஊசிகள் பெரிய நீல நாற்காலியில் விழுந்தன.


ஒரு பெரிய குழப்பமே உண்டானது.



மிக்கி ஊசிகளை எடுக்க ஆரம்பித்தான். ஒரு ஊசி, இரண்டு ஊசிகள் என - பிறகு ஒரே நேரத்தில் மூன்று ஊசிகள் எடுத்தான்.

ஆனால் அது மிகவும் மெதுவாக வேலை செய்தது.ஸ்பூனில் எடுப்பது வேகமாக இருக்கும் என்று எண்ணினான்.

ஒரு ஸ்பூன். இரண்டு ஸ்பூன். ஆனால் அது கூட வேலைகளை வேகமாகச் செய்ய உதவவில்லை.



"ஒருவேளை குதிரைலாட காந்தம் உதவுமா ?"

மிக்கி மேலே பார்த்தான்.

அவன் தந்தை அவனிடம் ஒரு கனமான பொருளைக் கொடுத்தார்.

ஒருவேளை அது கொஞ்சம் உதவுமா ?

ஆனால் எப்படி ?

காந்தம் ஊசிகளை ஒரு குவியலாகத் தள்ளுமா ?

மிக்கி அதை முயற்சிப்பார்.



அருமை! எல்லா ஊசிகளும் காந்தத்தின் நுனியில் ஒட்டிக்கொண்டன.

ஊசிகளைச் சேகரித்து ஒன்றாகத் தள்ள வேண்டியதில்லை.



" இதோ முடிந்தது!" மிக்கி தன் அம்மாவிடம் சொன்னான்.

அவன் காந்தத்தை உலுக்கினான்.

சில ஊசிகள் அவன் அம்மாவின் மடியில் விழுந்தன.

மீதமுள்ள ஊசிகள் காந்தத்தில் ஒட்டிக் கொண்டிருந்தன.

அவன் அவற்றை இழுத்து எடுக்க வேண்டியிருந்தது.

இது ஒரு சிறந்த வேடிக்கையான விளையாட்டாக இருந்தது.

விரைவில் அவன் இந்த விளையாட்டை இன்னும் கொஞ்சம் ரசிக்க தொடங்கினான்.



மிக்கி காந்தத்தை கம்பளத்தின் மீது வைத்து

தேய்க்கிறான்

தரையில் ஏற்பட்ட விரிசலுக்கு அருகில்

நகர்த்தினான்,காந்தத்தை பெரிய நீல

நாற்காலிக்கு குறுக்கே தள்ளுகிறான் .

இப்போது அவனிடம் எல்லா ஊசிகளும்

கிடைத்துவிட்டன.

அவன் மீண்டும் அந்த பெட்டியை நிரப்புகிறான்.

அவன் அவற்றை இப்படியே கொட்டிக்கொண்டே

இருக்க விரும்புகிறான்.

ஆனால் அவன் அம்மாவுக்கு அந்த ஊசிகள்

அவசரமாகத் தேவைப்பட்டன.



மிக்கி தன் அம்மாவின் தையல் கூடையைப் பார்க்கிறான்.

அது பல பொருட்களால் நிறைந்திருந்தது -

கத்தரிக்கோல் மற்றும் பொத்தான்கள் ,

ஊசி மற்றும் நூல் ,

நெகிழி விரல் உறை ,

கொத்து கொக்கிகள் .

அவன் அந்த காந்தத்தைக் கூடைக்குள் தள்ளினான்.

காந்தத்தில் ஒட்டிக்கொள்வதன் மூலம் கத்தரிக்கோல் , ஊசி மற்றும் கொக்கி மேலே வந்தன .

ஆனால் பொத்தான்கள் இல்லையா ?

நூல் இல்லையா ? விரல் உறை இல்லையா ?

காந்தம் உலோகப் பொருட்களை மட்டுமே ஒட்டிக்கொள்வது போல் தோன்றியது.



அவன் கத்தரிக்கோல், ஊசிகள், கொக்கிகள்

ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, எடுப்பதற்கு

வேறு பொருட்களைத் தேடிச் சுற்றிலும்

பார்க்கிறான்.

பீங்கான்களால் செய்யப்பட்ட பூனை

ஒரு சிறிய கண்ணாடி பாத்திரம் ,

ஒரு வெள்ளித் தாள் ,

மற்றும் ஒரு மென்மையான ,

உருண்டையான கல்.

காந்தம் அவற்றில் எதையும் எடுக்கவில்லை.

மிக்கி வேறு ஏதாவது தேடுவது நல்லது

என்று நினைத்தான்.





அவனுக்கு சமையலறையில் ஏதாவது கிடைக்குமா?

ஒரு வளைந்த பாட்டில் மூடி ,

வெள்ளை சோப்பு ஒரு துண்டு

மற்றும் ஒரு பளபளப்பான நாணயம்.

ரஸ்டியின் நாய் கிண்ணத்திற்கு அருகில்

தரையில் கிடக்கும் அந்த ரப்பர் எலும்பு ?

மிக்கி அமர்ந்தான்.

அவன் எல்லாவற்றையும் கீழே போடுகிறான்.

“டொப்” என பாட்டில் மூடியும்,நாணயமும் தண்ணீரில் விழுந்தது!



ஒருவேளை காந்தம் நாணயத்தை வெளியே இழுக்கும்.

காந்தத்துடன் பாட்டில் மூடி வெளியே வந்தது.

ஆனால் நாணயம் வெளியே வரவில்லை.

மிக்கி மிகவும் கடினமாக முயற்சித்தான்.அப்போதும் நாணயம் வெளியே வரவில்லை.

அவன் தன் விரல்களால் நாணயத்தை எடுக்க வேண்டியிருக்கிறது.

காந்தம் அவன் கையில் இருந்து நாணயத்தை எடுக்கவில்லை.

நாணயம் காய்ந்திருந்தாலும் சரி, ஈரமாக இருந்தாலும் சரி காந்தங்களால் அவற்றை எடுக்க முடியாது.

காரணம் அந்த நாணயம் உலோகத்தால் ஆனது இல்லையா ?

மிக்கிக்கு எதுவும் புரியவில்லை.

ஆனால் அப்பாவுக்குத் தெரிந்திருக்க

வேண்டும்.

பின்னர் இருவரும் ஒன்றாக

முயற்சித்தனர்

ஒரு அணா ,ஒரு ரூபாய்

நாணயம்,ஒரு அலுமினிய மிட்டாய்

கிண்ணத்தை முயற்சி செய்து

பார்க்கிறார்கள்.



மிக்கியின் தந்தை , " காந்தங்கள்

இரும்பையும் எஃகையும் மட்டுமே

ஈர்க்கும்.

காந்தங்கள் மற்ற உலோகங்களை

ஈர்க்காது" என்றார்.


மிக்கி அந்தக் காந்தத்தை, வர்ணம் பூசப்பட்ட


ஒரு மரக் குதிரையின் மீது வைத்துத்

தொடுகிறான் ,எதுவும் நிகழவில்லை . ஒரு

ஈயச் சிப்பாய் மீது வைத்தால் என்ன ஆகும்?

அங்கும் இரும்போ அல்லது எஃகோ இல்லை!






பின்னர் அவன் சேகரித்த பொருட்களுடன் விளையாட அமர்கிறான்.

முதலில் அவன் ஒரு காந்தம் கொண்ட ஊசியை எடுக்கிறான்.

அந்த ஊசியிலிருந்து ஒரு குண்டூசி தொங்கிக்கொண்டிருக்கிறது.

அந்த ஊசியும் ஒரு காந்தமாக மாறியிருக்க வேண்டும்!



பின்னர் மிக்கி காந்தத்திலிருந்து ஊசியை இழுத்து எடுக்கிறான்.

அவன் மீண்டும் ஊசியால் ஊசியைத் தூக்க முயன்றான், ஆனால் எதுவும் நடக்கவில்லை.

இதன் பொருள் ஊசி இனி ஒரு காந்தம் அல்ல !



மிக்கி மீண்டும் ஊசியை காந்தத்தில் மாட்டிவிட்டு, பின்னர் ஊசியால் ஊசியைத் தொட்டான்.

அந்த ஊசி மற்ற ஊசியையும் ஈரத்துக்கொள்கிறது.

" பாருங்கள் ," என்று அவன் அப்பாவிடம் கூறினான்,

"சில நேரங்களில் ஒரு ஊசி கூட ஒரு காந்தமாக மாறும் ."

" ஆமாம் ,“ என்று அப்பா சொன்னார் , "


இதைப் பாருங்க."

மிக்கி தன் தந்தை குதிரைலாட

காந்தத்தில் ஊசியைத் தேய்த்தபோது

எண்ணிப் பார்த்தான். ஐந்து முறை...

பத்து முறை... இருபது முறை.



இப்போது காந்தத்தில் தேய்க்கப்பட்ட

ஊசியால் மீண்டும் ஊசியை எடுக்க

முடிந்தது.


" ஒரு காந்தம்!" மிக்கி வியந்து கூறினான்.

" இப்போது என் ஊசி ஒரு ஊசியைப்

பிடிக்க முடியும்!"

இப்போது நானும் அதுபோன்ற ஒரு

காந்தத்தை உருவாக்குவேன்."





மிக்கி இன்னொரு ஊசியை எடுத்தான்.

அவன் அதை காந்தத்தில் தேய்த்தான்.

அவன் ஒரு குதிரைலாட காந்தத்தில் ஊசியைப் பலமுறை தேய்த்தான்.

அவன் எப்போதும் ஊசியை ஒரே திசையில்தான் தேய்த்தான்.

பிறகு அந்த ஊசி ஒரு காந்தம் போல
வேலை செய்ய ஆரம்பித்தது!



" பாருங்க , நான் ஒரு காந்தத்தை உருவாக்கியிருக்கேன்."
அவன் அம்மாவிடம் ஓடினான்.

ஐயோ! அந்த குண்டூசிப் பெட்டி மறுபடியும் விழுந்துவிட்டது..
மீண்டும் தரையெங்கும் ஊசிகள் சிதறிக்கிடந்தன.



மிக்கி ஊசிகளை எடுக்க ஆரம்பித்தான்.

ஆனால் இந்த முறை பணி அவருக்கு எளிதாக இருந்தது.

ஏனென்றால் அவனிடம் ஒரு காந்தம் இருந்தது.

மிக்கி தானே உருவாக்கிய ஒரு காந்தம்.





காந்தங்களில் பல வகைகள் உள்ளன.

மிக்கி ஒரு குதிரைலாட காந்தத்தால் ஊசிகளை எடுத்தான்.

உங்கள் காந்தத்தால் ஊசிகளை எடுக்க முடியுமா ?

மிக்கி செய்ததைச் செய்ய நீங்கள் எந்த காந்தத்தையும் பயன்படுத்தலாம்

உங்கள் காந்தத்தைப் பற்றி வேறு என்ன கண்டுபிடிக்க முடியும் ?

மிக்கி தனது காந்தத்தால் என்ன எடுக்கிறான் என்று பாருங்கள்.

நீங்களும் காந்தங்களைக் கொண்டு பல வேடிக்கையான

விஷயங்களை செய்து பாருங்கள்

